aபிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

02 10 2025 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மாநிலங்களுக்கான வரிப் பகிர்வாக தமிழகத்திற்கு 4 ஆயிரத்து 144 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.
- தேசத்தந்தை மகாத்மா காந்தியின் 156வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.
- தூய்மை இந்தியா சிறப்பு இயக்க பணிகள் இன்று தொடங்கி இம்மாதம் 31ஆம் தேதி வரை நடைபெறுகிறது.
- தமிழகத்தில் செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- தேசிய செஸ் சாம்பியன் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் இனியன் பட்டம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மாநிலங்களுக்கான வரிப் பகிர்வாக தமிழகத்திற்கு 4 ஆயிரத்து 144 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.

இதுகுறித்து நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், எதிர்வரும் பண்டிகை காலத்தை ஒட்டி மாநிலங்களின் வளர்ச்சி மற்றும் நலனுக்கான செலவினங்களைக் கருத்தில் கொண்டு முன்கூட்டியே இத்தொகை விடுவிக்கப்படுவதாக கூறியுள்ளது.

மொத்தம் 28 மாநிலங்களுக்கு ஒரு லட்சத்து ஆயிரத்து 603 கோடி ரூபாயை வரிப் பகிர்வின் முன்கூட்டிய தவணைத் தொகையாக விடுவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தேசத்தந்தை மகாத்மா காந்தியின் 156வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி நாடு முழுவதும் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லி ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் சர்வமத பிரார்த்தனைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நாளையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில், அமைதி, சகிப்புத்தன்மை மற்றும் உண்மை குறித்து மகாத்மா காந்தி எடுத்துரைத்துள்ளதாக கூறியுள்ளார்.

மேலும் தீண்டாமை, கல்வியறிவின்மை, போதைப்பொருள் மற்றும் பிற சமூக தீமைகளைக் களைவதற்காக அவர் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார் என்றும், சமூகத்தின் பின்தங்கிய பிரிவினருக்கு வலிமையையும், ஆதரவையும் வழங்கியதாக குடியரசுத்தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

மகாத்மா காந்தியின் பிறந்த தினம் சர்வதேச அகிம்சை தினமாகவும் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி நியூயார்க்கில் ஐ.நா.வுக்கான இந்திய தூதரகத்தில் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் பிறந்த தினமும் இன்று கொண்டாடப்படுகிறது.

**<<<<>>>>**

சென்னை அருகே எண்ணூர் அனல் மின் நிலைய கட்டுமானப் பணியின்போது நடந்த விபத்திற்கு குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த விபத்தில் தொழிலாளர்கள் உயிரிழந்த செய்தி அறிந்து தாம் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்ததாக கூறியுள்ளார்.

அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினர் அனைவருக்கும் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதாகவும், காயமுற்ற அனைவரும் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தூய்மை இந்தியா சிறப்பு இயக்க பணிகள் இன்று தொடங்கி இம்மாதம் 31ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

அரசு அலுவலகங்களில் தூய்மையைக் கடைபிடிக்கவும், நிலுவையில் உள்ள பணிகளுக்கு தீர்வு காணும் வகையிலும் இந்த சிறப்பு இயக்கத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி மத்திய அரசின் அனைத்து அமைச்சகங்கள் மற்றும் அதுசார்ந்த துறைகளின் அலுவலகங்களில் இந்த தூய்மைப் பணிகள் நடைபெற உள்ளன.

<<<<>>>>

இனி, மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள் ...

சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு, ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு.நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த நிர்வாகத்தின் மூலம், மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.

இது குறித்த சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது, நக்சல் தீவிரவாதத்தை ஒடுக்க மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள்...

(சவுண்ட் பைட் .... வினாடிகள்)

*V.O. -1*

(பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு நக்சல் தீவிரவாதத்தை ஒரு போதும் அனுமதிப்பதில்லை என்ற உறுதியான கொள்கையை, கடந்த 11 ஆண்டுகளாக கடைபிடித்து வருகிறது.

நக்ஸல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசு திட்டங்கள் முழுமையாக செயல்படுத்தப்பட்டு, மக்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்பட்டு வருகிறது.

பிரதமர், இவ்வாண்டு விடுத்த சுதந்திர தின செய்தியில், நக்ஸல் மற்றும் மாவோயிஸ்ட் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் செயல்படுத்தப்பட்ட அரசு திட்டங்களால், அங்குள்ள மக்கள் பொருளாதார ரீதியாக மேம்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் பிரதமர் . . . . வினாடிகள்)

நக்ஸல் தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி அரசு, இரண்டு விதிகளை பின்பற்றி வருகிறது.

முதலாவதாக, நக்ஸல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வன்முறையை கட்டுப்படுத்த சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளை தீவிரமாக செயல்படுத்துவது,

இரண்டாவதாக, நீண்டகாலமாக தடைபட்டிருந்த பொருளாதார வளர்ச்சிக்கான பணிகளை மேற்கொள்வது ஆகிய விதிகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி கடைபிடித்து வெற்றி கண்டுள்ளது.

நக்ஸல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான மத்திய பட்ஜெட் ஒதுக்கீட்டை 300 சதவீதமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

நக்ஸல் தீவிரவாதத்தை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்ற முனைப்போடு செயல்பட்டு வரும் மத்திய அரசு, வன்முறைச் சம்பவங்களை கணிசமாக குறைத்துள்ளது.

தீவிரவாத தாக்குதலில், பாதுகாப்புப் படை வீரர்களின் உயிரிழப்பும் கணிசமாக குறைந்தள்ளது.

நக்ஸல் தீவிரவாத நடவடிக்கைகளை மண்டல மற்றும் செயல்பாட்டின் அடிப்படையில் வலுவிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் வெற்றி பெற்றுள்ளன.

பாதுகாப்பு, பொருளாதார மேம்பாடு, மக்களுக்கான அதிகாரம் உள்ளிட்ட ஒட்டுமொத்த நடவடிக்கைகளால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது.

நீடித்த அரசியல் மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களால் நக்ஸல் தீவிரவாதம் இல்லாத இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வை விரைவில் சாத்தியமாகும் என்று எதிர்பார்க்கலாம்.

**<<<<>>>>**

தமிழகத்தில் செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 2 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிட்டார்.

**<<<<>>>>**

*<u>இருவரிச் செய்திகள்</u>*

யுக்ரைன் உடனான அமைதிப் பேச்சுவார்த்தை தற்காலிகமாக நிறுத்தபப்பட்டுள்ளது என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

எத்தியோப்பியா நாட்டின் Amhara பிராந்தியத்தில் கட்டப்பட்டுக்கொண்டிருந்த தேவாலயம் இடிந்து விழுந்த விபத்தில் 25 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

பேரிடர் மீட்புப் பணிகளுக்காக 9 மாநிலங்களுக்கு 4 ஆயிரத்து 645 கோடி ரூபாயை மத்திய உள்துறை அமைச்சகம் விடுவித்துள்ளது.

<<<<>>>>

காதி திருவிழாவின் ஒரு பகுதியாக புதுதில்லியில் சிறப்பு கண்காட்சியை முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தில் கடந்த 2 நாட்களில் மின்னல் தாக்கியதில் 11 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

<<<<>>>>

ராமநாதபுரம் மாவட்டத்தில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பயணம் மேற்கொள்வதை ஒட்டி ராமநாதபுரம் மற்றும் பரமக்குடி எல்லைப் பகுதிகளில் இன்றும் நாளையும் ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பொதுமக்களிடம் தனியார் ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்வதைத் தடுக்க மாநிலம் முழுவதும் தீவிர சோதனை செய்து நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

நவராத்திரி விழாவையொட்டி பழனி முருகன் கோயிலில் வன்னிகாசூரனை அம்பு எய்து வதம் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது.

**<<<<>>>>**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே பிரசித்தி பெற்ற ஒலி ஆலயம் சித்தர் பீடத்தில் ராஜேந்திர சுவாமிகள் குருபூஜை விழா நடைபெற்றது.

**<<<<>>>>**

வேலூர் மாவட்டம் காட்பாடியில் போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட விவகாரத்தில் மேலும் 4 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

**<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

தேசிய செஸ் சாம்பியன் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் இனியன் பட்டம் வென்றார்.

ஆந்திரப்பிரதேச மாநிலம் குண்டூரில் நடைபெற்ற இப்போட்டியின் 11 சுற்றுகளில் 7 சுற்றில் வெற்றியும், 4 சுற்றில் டிராவும் செய்து இப்பட்டத்தைக் கைப்பற்றினார்.

கேரளாவைச் சேர்ந்த கௌதம் கிருஷ்ணா இரண்டாம் இடம் பிடித்தார்.

<<<<>>>>

உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியா 8 தங்கம் உட்பட 26 பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்தது.

புதுதில்லியில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளான நேற்று ஆடவர் 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் முகேஷ் நெலவள்ளி தங்கப் பதக்கமும், சஹில் சௌத்ரி வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

மகளிர் பிரிவில் தேஜஸ்வனி சிங் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

10 வெள்ளிப் பதக்கங்களையும், 8 வெண்கலப் பதக்கங்களையும் இந்தியா வென்றது.

<<<<>>>>

ஆசிய நீச்சல் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீஹரி நட்ராஜ், பவ்யா சச்தேவா, சஜன் பிரகாஷ் ஆகியோர் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ரிலே பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றது.

<<<<>>>>

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

அஹமதாபாதில் நடைபெற உள்ள இப்போட்டி காலை மணி 9.30க்கு தொடங்குகிறது.

இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி தில்லியில் வரும் 10ஆம் தேதி தொடங்குகிறது.

<<<<>>>>

ஆஸ்திரேலியா ஏ அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏ அணி 171 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

<<<<>>>>

போர்ச்சுகலில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>

ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்று வரும் Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் Alap Mishra, Manraj Singh, Mithun Manjunath ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் தஸ்னீம் மிர், தன்யா ஹேமந்த், ஆகர்ஷி கஷ்யப், அனுபமா உபாத்யாயா ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<>>>>

உலக பளுதூக்குதல் சாம்பியன் போட்டி நார்வேயில் இன்று தொடங்குகிறது.

இம்மாதம் 11ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் மகளிர் பிரிவில் மீராபாய் சானு, ஆடவர் பிரிவில் Lovepreet Singh உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>